# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

## அவர்கள் கனடாவிலுள்ள பைத்துந் நூர் பள்ளிவாயிலில்

## 24.05.2013 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் சூரா அந்நூரின் 52 முதல் 57 வரையுள்ள வசனங்களை ஓதினார்கள்:**

إِنَّمَا كَانَ قَوْلَ الْمُؤْمِنِينَ إِذَا دُعُوا إِلَى اللَّهِ وَرَسُولِهِ لِيَحْكُمَ بَيْنَهُمْ أَن يَقُولُوا
سَمِعْنَا وَأَطَعْنَا ۚ وَأُولَٰئِكَ هُمُ الْمُفْلِحُونَ ﴿٥٢﴾

وَمَن يُطِعِ اللَّهَ وَرَسُولَهُ وَيَخْشَ اللَّهَ وَيَتَّقْهِ فَأُولَٰئِكَ هُمُ الْفَائِزُونَ ﴿٥٣﴾

وَأَقْسَمُوا بِاللَّهِ جَهْدَ أَيْمَانِهِمْ لَئِنْ أَمَرْتَهُمْ لَيَخْرُجُنَّ ۖ قُل لَّا تُقْسِمُوا ۖ
طَاعَةٌ مَّعْرُوفَةٌ ۚ إِنَّ اللَّهَ خَبِيرٌ بِمَا تَعْمَلُونَ ﴿٥٤﴾

قُلْ أَطِيعُوا اللَّهَ وَأَطِيعُوا الرَّسُولَ ۖ فَإِن تَوَلَّوْا فَإِنَّمَا عَلَيْهِ مَا حُمِّلَ وَعَلَيْكُم مَّا حُمِّلْتُمْ ۖ
وَإِن تُطِيعُوهُ تَهْتَدُوا ۚ وَمَا عَلَى الرَّسُولِ إِلَّا الْبَلَاغُ الْمُبِينُ ﴿٥٥﴾

وَعَدَ اللَّهُ الَّذِينَ آمَنُوا مِنكُمْ وَعَمِلُوا الصَّالِحَاتِ لَيَسْتَخْلِفَنَّهُمْ فِي الْأَرْضِ كَمَا
اسْتَخْلَفَ الَّذِينَ مِن قَبْلِهِمْ وَلَيُمَكِّنَنَّ لَهُمْ دِينَهُمُ الَّذِي ارْتَضَىٰ لَهُمْ
وَلَيُبَدِّلَنَّهُم مِّن بَعْدِ خَوْفِهِمْ أَمْنًا ۚ يَعْبُدُونَنِي لَا يُشْرِكُونَ بِي شَيْئًا ۚ وَمَن
كَفَرَ بَعْدَ ذَٰلِكَ فَأُولَٰئِكَ هُمُ الْفَاسِقُونَ ﴿٥٦﴾

وَأَقِيمُوا الصَّلَاةَ وَآتُوا الزَّكَاةَ وَأَطِيعُوا الرَّسُولَ لَعَلَّكُمْ تُرْحَمُونَ ﴿٥٧﴾

இவ்வசனத்தின் பொருள்: நம்பிக்கை கொண்டவர்கள் அல்லாஹ்வின் பாலும், அவனது தூதரின் பாலும் அவர்களுக் -கிடையில் தீர்ப்பு வழங்குவதற்காக அழைக்கப்பட்டால் நாங்கள் செவியேற்றோம்; நாங்கள் கட்டுப்பட்டு விட்டோம் என்று கூறுவதே அவர்களின் பதிலாக இருந்து வருகிறது. இத்தகையவர்களே வெற்றி பெறுவோராவார்.

அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்பட்டு நடந்து அல்லாஹ்வுக்கு அஞ்சி (பாதுகாப்பிற்குரிய) கேடயமாக அவனை எடுத்துக் கொள்பவர்கள் வெற்றியடைபவர்களாவர்.

நீர் அவர்களுக்குக் கட்டளையிட்டால், உடனே அவர்கள் (வீடுகளிலிருந்து) புறப்பட்டு விடுவதாக அல்லாஹ்வின் மீது உறுதி வாய்ந்த சத்தியங்களைச் செய்கின்றனர். நீர் கூறுவீராக! சத்தியங்கள் செய்யாதீர்கள். பொதுவாக கட்டுப்பட்டு நடப்பதே போதுமானதாகும். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்வதை நன்கு தெரிந்து கொள்பவனாவான்.

அல்லாஹ்வுக்கும் கட்டுப்பட்டு நடங்கள். இத்தூதருக்கும் கட்டுப்பட்டு நடங்கள் என்று நீர் கூறுவீராக! எனவே நீங்கள் புறக்கணித்து விட்டால் (அத்தூதுவரிடம் ஒப்படைக்கப்பட்டதற்கே அவர் பொறுப்பாளர் ஆவார். உங்களிடம் ஒப்படைக்கப்பட்டதற்கு நீங்கள் பொறுப்பாளர் ஆவீர்கள். நீங்கள் அவருக்குக் கட்டுப்பட்டு நடந்தால் நீங்கள் நேர்வழியினைப் பெறுவீர்கள். மேலும் இத்தூதரின் பொறுப்பு தூதுச் செய்தியினைத் தெளிவாக எடுத்துரைப்பது மட்டுமேயாகும்.

*அல்லாஹ் உங்களுள் நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றுபவர்கள் அவர்களின் முன்னோர்களை கலீஃபாவாக (தலைவராக) ஆக்கியது போன்று இப்பூமியில் கலீஃபாவாக ஆக்குவதாகவும், அவன் அவர்களுக்காக விரும்பிய அவர்களின் மார்க்கத்தை அவர்களுக்கு உறுதிப்படுத்துவ தாகவும், அவன் அவர்களுக்கு அவர்களது அச்சத்திற்குப் பிறகு அதற்குப் பதிலாக அமைதியினை வழங்குவதாகவும் அவர்களிடம் வாக்குறுதியளித்துள்ளான். அவர்கள் என்னை வணங்குவார்கள்; எதனையம் எனக்கு இணையாக்க மாட்டார்கள். இதன் பின்னரும் நிராகரிப்பவர்கள் கட்டுப்படாதவர்களாவார்கள்.*

*நீங்கள் தொழுகையை நிறைவேற்றுங்கள். மேலும் ஸகாத் கொடுங்கள். இத்தூதருக்கு கட்டுப்பட்டு நடஙகள். அப்போது தான் உங்கள் மீது கருணை காட்டப்படும். (24:52-57)*

மே மாதத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு ஒரு முக்கியமான நாள் உள்ளது. அதாவது மே 27ம் தேதி ஜமாஅத்தில் கிலாஃபத் தினமாக கொண்டாடப்படுகிறது. இன்னும் மூன்று நாட்கள் இருந்த போதிலும் இது தொடர்பாகவே நான் எனது கருத்துக்களைக் கொண்டு வந்துள்ளேன்.

1908 ஆம் ஆண்டு மே 26ம் நாளானது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாற்றில் பலரது உள்ளத்தை உலுக்கிய ஒரு நாளாகும். பலரது ஈமானை சோதித்த நாளாகும். சிலரது உணர்வுகளை நிம்மதியிழக்கச் செய்த நாளாகும். பகைவர்கள் ஜமாஅத்தின் உறுப்பினர்களின் உள்ளங்களையும், உணர்வுகளையும் புண்படுத்திய நாளாகும். அஹ்மதிய்யா வரலாற்றில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பகைவர்கள் செய்த செயல்கள் எந்த அளவுக்கு பதியப்பட்டுள்ளன என்றால், அதனைப் படிக்கும் ஒருவர், இந்த அளவு மோசமாக நடந்து கொள்ள முடியுமா? என வியப்பில் ஆழ்ந்து விடுகிறார். அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய மரணத்தின் போது பகைவர்கள் செய்த செயல்கள் அவ்வளவு மோசமானதாக இருந்தது.

இவர்கள் தம்மை முஸ்லிம்கள் எனக் கூறிக் கொண்டு, தம்மை ரஹ்மத்துல் லில் ஆலமீனைச் சேர்ந்தவர்களாவோம் எனக் கூறிக் கொண்டு இப்படிப்பட்ட செயல்களை இவர்கள் செய்கின்றார்கள். எவ்வாறாயினும் ஒவ்வொருவரும் தத்தமது இயல்பிற்கேற்பவே செயல்படுகின்றனர். ஆனால் பிறகு அல்லாஹ்வின் வல்லமை வெளிப்படுகின்றது. அவனது வாக்குறுதிகள் நிறைவேறுகின்றன. மே 27 ம் தேதி, அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு நிம்மதி தரக்கூடியதாகவும், அமைதிக்கான தூதாகவும் வந்தது. அது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் இறைவன் செய்த வாக்குறுதிகள் நிறைவேறுவதற்கான நற்செய்தியினைக் கொண்டு வந்தது. அது பகைவர்களுக்கு அவர்களது நெருப்பில் அவர்களே தம்மை அழித்துக் கொள்ளக்கூடியதாக அந்நாள் வந்தது.

ஆக, அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு இந்த நாள் ஒரு சாதாரண நாள் கிடையாது. மாறாக இந்த நாளுக்கு மிகப்பெரிய முக்கியத்துவம் உள்ளது. மேலும் நாம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய முன்னறிவிப்புகளைப் பார்க்கும் போது இதன் முக்கியத்துவம் இன்னும் அதிகமாகி விடுகிறது. முஸ்லிம் உம்மத்தில் பெரும்பான்மை மிகவும் ஆதங்கத்துடன் ஜமாஅத்தின் பக்கம் பார்க்கின்றது. மாறாக ஆதங்கத்தை விட அதிகமாக பொறாமையுடன் இவர்களிடம் கிலாஃபத் நிலைபெற்றிருக்கிறது எனப் பார்க்கின்றது. மேலும் தமக்குள் கிலாஃபத்தை ஏற்படுத்துவதற்கு பலமுறை முயற்சி செய்கின்றனர்; செய்து கொண்டும் இருக்கின்றனர். ஆனால் எப்போதுமே தோல்வியைத் தான் அடைந்துள்ளனர். ஏனென்றால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது தெளிவான கட்டளையையும், வழிகாட்டலையும் மறுக்கின்றனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மஸீஹ் மவ்வூது மற்றும் மஹ்தி மவ்வூது தோன்றும் போது தன்னைக் கஷ்டத்திற்குள்ளாக்கி பனி மலையின் மீது முழங்காலிட்டு இழுத்துக் கொண்டு செல்ல நேரிட்டாலும் அவரிடம் செல்ல வேண்டும்; எனது ஸலாமை எட்ட வைக்க வேண்டும் என கூறியுள்ளார்கள்.

மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள் அடையாளங்களையும் கூறியுள்ளார்கள். அது நிறைவேறினால் வாதம் புரியக் கூடியவர் உண்மையாளர் என புரிந்து கொள்ளுங்கள் எனவும் கூறியுள்ளார்கள். இந்த அடையாளங்கள் விண்ணைச் சார்ந்தவையாகவும், மண்ணைச் சார்ந்தவையாகவும் உள்ளன. பலமுறை இதனைப் பற்றி ஜமாஅத் மக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. எனவே தற்போது இதன் விளக்கத்தின் பால் நான் செல்ல மாட்டேன். ஆனால் அது ஏற்றுக் கொள்ளாதவர்களின் துரதிஷ்டமே ஆகும். அவர்கள் உலக ஆதாயங்களினாலும், பெயர் தாங்கி ஆலிம்களின் அச்சத்தினாலும் அல்லது நபி (ஸல்) அவர்களுடைய

கட்டளையின் பால் செவிமடுக்காத காரணத்தினால், வாதம் புரியக் கூடியவரை ஏற்கவில்லை என்பது மட்டுமல்ல. எதிர்ப்பில் தீவிரமாக உள்ள சில முல்லாக்களின் அச்சத்தினால் அரசாங்கங்களும் இறைவன் புறமிருந்து வந்த நபருக்கு எதிராக மிகவும் மோசமான இழிவான வார்த்தைகளை உபயோகப்படுத்துகின்றது. மேலும் வெறுக்கத்தக்க செயல்களிலும் ஈடுபடுகின்றது. அவர்கள் இதை அறிந்தே செய்கின்றனர். வரக்கூடியவரின் நேரத்தைக் குறித்து காலம் சப்தமிட்டு அறிவிப்பு செய்கின்றது. இறைவன் அடையாளங்களை வெளிப்படுத்தியும் விட்டான். மேலும் வெளிப்படுத்திக் கொண்டே இருக்கின்றான். ஆனால் இறைவன் புறமிருந்து வந்தவரை இவர்கள் எதிர்த்துக் கொண்டே செல்கின்றனர். ஒவ்வொரு எதிர்ப்பிற்குப் பிறகும் ஒரு புதிய தண்டனையின் கீழ் இவர்கள் வருகிறார்கள். ஆனால் இவர்களது பிடிவாதம் எப்படிப்பட்டதென்றால் எதிர்ப்பை இவர்கள் கைவிடுவதில்லை.

எனவே இதனை இவர்களது துரதிஷ்டம் என்று கூறாமல் வேறென்னவென்று கூற முடியும்? எவ்வாறாயினும் நான் கூறியது போன்று இந்த நாளுக்கு முக்கியத்துவம் இருக்கின்றது. இதனைப் பற்றிய அறிவிப்பை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தனது முன்னறிவிப்பில் கூறியிருக்கிறார்கள். அது ஒரு குறிப்பிட்ட தேதியில் நிகழும் என கூறவில்லை. எனினும் வரக்கூடிய உண்மைப் பேரன்பரான மஸீஹ் மவ்வூது உடைய தோற்றம் குறித்து அறிவித்த பின்னர் கிலாஃபத்தைப் பற்றிய முன்னறிவிப்பை செய்துள்ளார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அறிவித்த இதனை விட வேறெந்த விசயத்திற்கு முக்கியத்துவம் இருக்க முடியும்? ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய ஒரு ஹதீஸ் இவ்வாறு வருகிறது.

**ஹஸ்ரத் ஹுதைஃபா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

அல்லாஹ் நாடும் வரை உங்கள் மத்தியில் நுபுவ்வத் நிலைபெற்றிருக்கும். பிறகு அதனை எடுத்துக் கொள்வான். அதன் பின்னர் நுபுவ்வத் வழியில் கிலாஃபத் நிலைபெறும். அல்லாஹ் விரும்பும் போது இந்த அருளையும் எடுத்துக் கொள்வான். பிறகு அவனது நியதிற்கேற்ப தீங்கிழைக்கக்கூடிய மன்னராட்சி நிலைபெறும். அதில் மக்கள் துன்பப்படுவார்கள். மிகவும் கஷ்டப்படுவார்கள். இந்தக் காலகட்டம் முடிந்த பிறகு அவனது இரண்டாவது நியதிக்கேற்ப கொடுங்கோல் ஆட்சி நிலைபெறும். எந்த அளவுக்கென்றால் பிறகு அல்லாஹ்வின் கருணை வெளிப்படும். இந்த அநீதி மற்றும் கொடுமையான நிலைமைக்கு முடிவு கட்டப்படும். இதன் பிறகு நுபுவ்வத் வழியில் கிலாஃபத் நிலைபெறும். இதனைக் கூறிய பின்னர் நபி (ஸல்) அவர்கள் அமைதியாகி விட்டார்கள்.

ஆக, முதலில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது நுபுவ்வத்தைப் பற்றி கூறியுள்ளார்கள். பிறகு நுபுவ்வத் வழியில் தொடரக்கூடிய கிலாஃபத்தே ராஷிதா நிலைபெறுவதைக் குறித்துக் கூறியுள்ளார்கள். மேலும் கிலாஃபத்தே ராஷிதா என்று அழைக்கக்கூடிய முதல் நான்கு கிலாஃபத்தும், எவ்வாறு உலக பெருமைகளிலிருந்து விலகியவாறு இறைவனுக்காக இறை விருப்பத்தினை எப்போதும் கண்முன் நிறுத்தியவாறு கிலாஃபத் பணிகளைச் செய்தது என்பதை உலகம் பார்த்தது. பிறகு நபி (ஸல்) அவர்களுடைய கூற்று எவ்வாறு சொல்லுக்கு சொல் நிறைவேறியது என்றால், அதன் பின்னர் தோன்றிய முஸ்லிம் மன்னராட்சியில் குறைவாக தீங்கிழைக்கக்கூடிய சில காலங்களில் அதிகமாக தீங்கிழைக்கக்கூடிய மன்னராட்சி நிலைபெற்றதைப் பார்க்க முடிகிறது.

ஆக, கிலாஃபத்தே ராஷிதாவிற்குப் பிறகு இவ்வாறு மன்னராட்சி நிலைபெற்றது. இதன்படி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது கூற்று நிறைவேறியது. வரலாற்றைப் படித்துப் பார்த்தால் அநீதி மற்றும் கொடுமைகள் இந்த மன்னராட்சியில் நிலைகொண்டிருந்ததை நம்மால் பார்க்க முடியும். மன்னராட்சியில் மார்க்கத்தை விட உலகத்தின் பக்கமே அதிக கவனம் இருந்து வந்தது. அடுத்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். பிறகு எப்போதும் நடப்பது போல் அல்லாஹ் தனது அடியார்கள் மீது கருணை புரிவான். ஒரு இருண்ட காலத்திற்குப் பிறகு மீண்டும் அல்லாஹ்வின் கருணை வெளிப்படுகின்றது. இவ்வாறு அநீதி மற்றும் அநியாயமான காலகட்டம் முடிவடைகிறது. பிறகு நுபுவ்வத் வழியில் கிலாஃபத் நிலைபெறுகிறது. இதன் பிறகு அவர்கள் அமைதியாகி விட்டார்கள் என ஹதீஸில் வருகிறது.

இந்த ஹதீஸின் பால் கவனம் செலுத்தி ஒவ்வொரு மனிதராலும் கிலாஃபத்தே ராஷிதா பற்றிய ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது முன்னறிவிப்பு நிறைவேறியதைப் பார்க்க முடியும். பிறகு குறைவான தீங்கிழைக்கக்கூடிய

மன்னராட்சி அதன் பின்னர் கொடுங்கோல் ஆட்சியைப் பற்றிய அன்னாரது முன்னறிவிப்புகளும் நிறைவேறியது. பிறகு இந்த ஹதீஸின் கடைசிப் பகுதியினைப் பற்றி எல்லா விதமான அடையாளங்களும் நிறைவேறி உள்ளன. மேலும் இறைவன் வ ஆகரீன மின்ஹும் லம்மா யல்ஹகூ பிஹிம் – இவர்களைச் சந்திக்காத மற்ற மக்கள் மத்தியில் அவரை எழுப்புவான்.

அதாவது நுபுவ்வத் வழியில் கிலாஃபத் தொடர்வதற்கான வழியினை அல்லாஹ் மீண்டும் ஏற்படுத்துவான் என்ற அறிவிப்பையும் செய்துள்ளான். அவன் வெற்றியாளனும் ஞானமிக்கவனும் ஆவான் என்று அல்லாஹ் கூறியுள்ளான். அவனது ஞானம் செயல்படத் தொடங்கும் போது அவனது கருணை முழுமையாக வெளிப்படும் போது கொடுங்கோல் ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவர். பிறகு நுபுவ்வத் வழியில் கிலாஃபத் தோன்றியது.

அஹ்மதிகளாகிய நாம் நற்பேறு பெற்றவர்களாவோம். நாம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய ஹதீஸின் முன்னறிவிப்பின் கூற்றின் முதல் பகுதிக்கு உட்படக்கூடியவர்களாக நாம் இருக்கின்றோம். அதில் நாம் நம்பிக்கை கொள்கிறோம். மேலும் முழுமையாக நிறைவேறியதாக நம்புகிறோம். அதே சமயம், நாம் அதன் கடைசி பகுதியிலும் நம்பிக்கை கொள்கிறோம். மேலும் நாம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது கூற்றுகள் நிறைவேறி விட்டன என்பதில் முழுமையான நம்பிக்கை கொள்கிறோம்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது மற்றொரு ஹதீஸும் உள்ளது. வ ஆகரீன மின்ஹும் லம்மா யல்ஹகூ பிஹிம் அதாவது ஆகரீன்களிலும் தற்போது வரை முன்னவர்களுடன் இணையாத பின்னவர்களிலும் என்ற அல்லாஹ்வுடைய கூற்றின் மீது நம்பிக்கை கொண்டவாறு காலத்தின் நிலைமைகள் மற்றும் அனைத்து அடையாளங்களும் நிறைவேறுவதைப் பார்த்தவாறு வரக்கூடிய மஸீஹ் மவ்வூது மற்றும் மஹ்தி மவ்வூது மீதும் நாம் நம்பிக்கை கொள்கின்றோம்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை நபி (ஸல்) அவர்கள் ஒரு ஹதீஸில் நபியுல்லாஹ் என்று அழைத்துள்ளார்கள். மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள் எனக்கும் மஸீஹிற்கும் இடையில் எந்த நபியும் இல்லையெனக் கூறியுள்ளார்கள். மேலும் வ ஆகரீன மின்ஹும் என்ற வசனத்தின் அடிப்படையில் அல்லாஹ் இறுதிக் காலத்தில் தோன்றக் கூடியவரை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது காலத்தின் தோற்றமாக ஆக்கியுள்ளான். ஆக, வரக்கூடிய மஸீஹ் மவ்வூது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது தன்னை மாய்த்துக் கொண்டு அவர்களது நிழலாக தோன்றி நுபுவ்வத்தின் அந்தஸ்தை அடைவார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இந்த வசனத்தின் விளக்கத்தில் ஹஸ்ரத் ஸல்மான் ஃபார்ஸி (ரலி) அவர்களுடைய தோளில் கை வைத்து வரக்கூடியவர் இவர்களைச் சார்ந்தவராக இருப்பார். அவர் அரபி அல்லாதவராக இருப்பார் எனவும் கூறியுள்ளார்கள். ஈமான் மறைந்து கார்த்திகை நட்சத்திரம் வரை சென்று விடுவதைப் பற்றிய அடையாளத்தையும் கூறியுள்ளார்கள்.

இதனை அனைத்து ஆலிம்களும் ஒப்புக் கொள்கின்றனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வாதம் செய்த போது முஸ்லிம்களின் மார்க்க நம்பிக்கை மிகவும் பலவீனமாக இருந்தது. ஈமான் பூமியிலிருந்து மறைந்துபோய் இருந்தது. ஆக, இந்த அடையாளங்கள் யாவும் நிறைவேறியதை நாம் பார்க்கின்றோம். இந்த அடையாளங்கள் நிறைவேறியது வரக்கூடிய மஸீஹ் மவ்வூது சரியான நேரத்தில் தான் வந்துள்ளார் என்பதை எடுத்துரைக்கின்றது. இங்கு நான் இதனையும் விளக்க விரும்புகின்றேன். அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் காத்தமுல் குலஃபா என்ற ரீதியில் மின்ஹாஜ் நுபுவ்வத்தின் கிலாஃபத்தின் உயர்நிலையை அடைந்து விட்டார்கள். அதாவது மின்ஹாஜ் நுபுவ்வத்தின் மிகவும் உயர்வான தரத்தில் நிலைபெற்று விட்டார்கள். அல்லாஹ்வின் கூற்றுகள் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது கூற்றுகளின்படி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நிலையானது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது தன்னை முழுமையாக மாய்த்துக் கொண்டதன் காரணமாக ஸில்லி நபி – நிழல் வடிவிலான நபி என்ற அந்தஸ்தைப் பெற்றுள்ளார்கள்.

அன்னார் மூலமாக தொடர்ந்த கிலாஃபத் அமைப்பு, அவர்களது வழியிலேயே இன்னும் சரியாகக் கூறுவதாயிருந்தால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது வழியில் நிலைபெற்று இருக்கின்றது. அதன் பணி

திருக்குர்ஆனை, சரீஅத்தை மக்கள் மத்தியில் பரப்புவதாகும். திருக்குர்ஆனின் போதனைகளுக்கேற்ப அல்லாஹ்விற்குரிய உரிமைகளையும் படைப்பினங்களின் உரிமைகளையும் நிறைவேற்றுவதன் பக்கம் தானும் கவனம் செலுத்தியது, மற்றவர்களையும் கவனம் செலுத்த வைப்பதாகும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய நடைமுறையை தனது வழிகாட்டியாக ஆக்கிக் கொண்டு அதன்படி அமல் செய்வது ஜமாஅத்தை அதன் பக்கம் கவனம் செலுத்தச் செய்வது மற்றும் அமல் செய்ய வைப்பதாகும்.

அஹ்மதிய்யா கிலாஃபத்தும், இஸ்லாத்தின் மறுமலர்ச்சியில் கிலாஃபத்தே ராஷிதா உடைய தொடர்ச்சி ஆகும். முதல் கிலாஃபத்தைப் பற்றி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடமிருந்து அறிவைப் பெற்று ஒரு காலகட்டத்திற்குப் பிறகு முற்றுப்பெற்று விடும் என அறிவிப்பு செய்தார்கள். ஆனால் இரண்டாவது காலகட்டத்தின் கிலாஃபத்தைப் பற்றி அல்லாஹ்விடமிருந்து அறிவைப் பெற்று அது எப்போதும் நிலைத்திருக்கும் என்ற நற்செய்தியினை வழங்கியுள்ளார்கள். இந்த நற்செய்தி எப்படிப்பட்ட மக்களுக்காக வழங்கப்பட்டது? நிச்சயமாக இது கிலாஃபத்துடன் இணைந்திருக்கும் உரிமையைச் செலுத்தக்கூடிய மக்களுக்கு மட்டுமே ஆகும். இறையச்சத்தின்படி செயல்படக்கூடிய மக்களுக்கு, அமலே ஸாலிஹ் நற்செயல்கள் புரியக்கூடியவர்களுக்கு, இபாதத்துகளில் முன்னேறக் கூடியவர்களுக்கு மட்டுமே இந்த நற்செய்தி உரியது.

அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணையக்கூடிய மக்கள் பலர் உள்ளனர். ஆனால் அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் இணைந்திருப்பதற்கான உரிமையை செலுத்தக் கூடியவர்களாக அவர்கள் இருப்பதில்லை. எனவே அல்லாஹ்வின் நியதி அவர்களை ஜமாஅத்திலிருந்து வெளியேற்றி விடுகிறது. உலக வாதிகளாக இருப்பதால் அவர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்திலிருந்து சாதாரணமாகவே வெளியேற்றப்படுகிறார்கள். அல்லது அவர்கள் தாமாகவே வெளியேறுவதற்கான அறிவிப்பை செய்து விடுகிறார்கள்.

ஆனால் இப்படிப்பட்ட மக்கள் சென்று விட்டதன் காரணமாக அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முன்னேற்றத்தில் ஏதாவது வித்தியாசம் ஏற்பட்டுள்ளதா? எப்போதாவது தடைபட்டுள்ளதா? ஒருவர் சென்றதனால் அல்லாஹ் ஒரு ஜமாஅத்தை ஏற்படுத்தி விடுகின்றான். எப்போதுமே காய்ந்த கிளைகள் வெட்டப்படும். பின்னர் பசுமையான செழுமையான கிளைகள் இன்னும் அதிகமாக வளர்கின்றன. அதேபோன்று தான் இது அல்லாஹ்வின் வாக்குறுதியாகும். இந்த கிலாஃபத் அமைப்பு தற்போது தொடர வேண்டும். அதற்காகத்தான் மரத்தை தரிப்பது, அதனை சரி செய்வது மற்றும் பாதுகாப்பது ஆகியவற்றை அல்லாஹ் தனது சொந்த கையில் எடுத்துள்ளான். அல்லாஹ் தனது அதிக அன்பிற்குரிய மனிதர் மற்றும் நபியின் முன்னறிவிப்பை வெற்றி பெறச் செய்யாமல் ஒருபோதும் இருக்கமாட்டான்.

நிச்சயமாக இந்த முன்னறிவிப்பு நிறைவேறியது. இன்சா அல்லாஹ் இன்றும் நிறைவேறிக் கொண்டே செல்கிறது. ஆனால் சில சூழ்நிலைகள் வருகின்றன. அப்போது எதிரிகள் மற்றும் பலவீனமான ஈமான் கொண்டவர்கள், இப்போது இவர்கள் அழிந்து போய் விடுவார்கள் என நினைக்கின்றனர். ஆனால் அல்லாஹ்வின் ஆதரவான அடையாளங்கள் அப்படிப்பட்ட சூழ்நிலையிலிருந்து ஜமாஅத்தைப் பாதுகாத்து காப்பாற்றி விடுகின்றது. நான் கூறியது போன்று, உள்ளத்தை உலுக்கக்கூடிய காலகட்டம் ஜமாஅத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது மரண சமயத்தில் ஏற்பட்டது. எதிரிகள் மகிழ்ச்சியாக இருந்தார்கள். அஹ்மதிகள் மிகுந்த கவலையில் ஆழ்ந்திருந்தார்கள். ஆனால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதற்காக ஜமாஅத்தை ஆயத்தப்படுத்தி வைத்திருந்தார்கள்.

அல்லாஹ் எனக்கு மீண்டும் மீண்டும் உன்னுடைய நேரம் மிக அருகில் உள்ளது என்ற செய்தியை அறிவித்துக் கொண்டிருக்கின்றான் எனவும், இந்த விசயத்தின் மூலம் சோர்ந்து போகவோ துன்பப்படவோ அவசியமில்லை எனவும் கூறினார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது நூல் அல் வஸிய்யத்தில் கவலை அடைய வேண்டாம் என எழுதியுள்ளார்கள். இதில் உலகிலிருந்து நான் செல்ல விருப்பதைப் பற்றிய செய்தியும் உள்ளது. மேலும் அதில், ஜமாஅத்தின் ஆன்மீக, பொருளாதார மற்றும் அமைப்பு தொடர்பான விசயங்களையும் விளக்கியுள்ளார்கள். அது நிலைபெறுவது பற்றியும் எப்போதும் நிலைத்திருக்கும் என்பதனைப் பற்றியும் கூறியிருந்தார்கள்.

கவலைப்படாதீர்கள்; என்னுடன் இறைவனுடைய வாக்குறுதி உள்ளது. அவன் ஜமாஅத்திற்கு முன்னேற்றம் வழங்குவான். மேலும் முன்னேற்றம் அடையக்கூடிய மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அறிவித்த கிலாஃபத் நிலைபெற்றிருக்கும் ஜமாஅத் இதுவேயாகும் என்று கூறியுள்ளார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எழுதுகின்றார்கள்:**

இறைவனது வார்த்தை என்னிடம் கூறியது. பல சம்பவங்கள் உலகில் நடைபெறும். பல்வேறு தண்டனைகள் பூமியில் இறங்கும். அவற்றில் சில என்னுடைய வாழ்நாளிலேயே நிகழ்ந்து விடும். மேலும் சில பிறகு வரும். அவன் இந்த ஜமாஅத்திற்கு முழுமையான முன்னேற்றத்தை வழங்குவான். சில என்னுடைய கைகளிலும், இன்னும் சில எனக்குப் பிறகும் நிகழும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ் இரண்டு விதமான வல்லமையை வெளிப்படுத்துகின்றான். முதலாவது, நபிமார்களுடைய கைகள் மூலம் தனது வல்லமையின் கையை வெளிப்படுத்துகின்றான். இரண்டாவது, நபி உடைய மரணத்திற்குப் பிறகு கஷ்டங்களை சந்திக்க வேண்டிய நேரம் வரும் போது, எதிரிகள் கொந்தளிக்கும் போது மேலும் இவர்கள் முடிந்து விட்டார்கள். இவர்களது ஜமாஅத் அழிந்து விடும் என உறுதிகொள்ளும் நேரத்தில், ஜமாஅத் மக்களும் கூட நிலையற்று இருக்கும் போது இவர்களது இடுப்புகள் முறிந்து போய் இருக்கும் போது பல நஷ்டசவாளிகள் முர்தத் ஆவதற்குரிய வழியினை மேற்கொள்ளும் போது இறைவன் தனது இரண்டாவது வல்லமையை வெளிப்படுத்துவான். கீழே விழக்கூடிய ஜமாஅத்தைக் காப்பாற்றுவான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இரண்டாவது வல்லமையைப் பார்ப்பது உங்களுக்கு அவசியமானதாகும். அது வருவது உங்களுக்கு சிறந்ததாகும். ஏனென்றால் அது நிலையானதாகும். அதனுடைய தொடர் மறுமை வரை முறிந்து போய் விடாததும் ஆகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நான் போகும்போது இறைவன் உங்களுக்காக அந்த இரண்டாவது வல்லமையை அனுப்புவான். அது எப்போதும் உங்களுடன் இருக்கும். எவ்வாறென்றால் இறைவன் இது தொடர்பாக பராஹீனே அஹ்மதிய்யாவில் வாக்குறுதி அளித்துள்ளான். அந்த வாக்குறுதி என் தொடர்பானது அல்ல. மாறாக அது உங்களைப் பற்றிய வாக்குறுதியாகும்.

இறைவன் கூறுகின்றான்: நான் உம்மைப் பின்பற்றக்கூடிய இந்த ஜமாஅத்தை மறுமை வரை மற்றவர்கள் மீது வெற்றி பெறச் செய்வேன்.

ஆக, அல்லாஹ்வின் அருளினால் கடந்த 105 வருடங்களாக அல்லாஹ்வின் இந்த வாக்குறுதி நிறைவேறுவதைப் பார்த்து வருகிறோம். ஜமாஅத்தின் மீது பல்வேறு காலகட்டங்கள் வந்தன. ஆனால் ஜமாஅத் அல்லாஹ்வின் அருளினால் முன்னேற்றத்தின் பாதையில் மிகவும் வேகமாக வளர்ந்து வருகிறது. ஒரு நாட்டில் எதிரி அநீதி மற்றும் வரம்பு மீறல்கள் மூலமாக கஷ்டப்படுத்துவதற்கு முயற்சிகளைச் செய்கின்றான். அநீதியும் அக்கிரமும் செய்கின்றான். ஆனால் அல்லாஹ் மற்றொரு நாட்டில் வெற்றிக்கான ஆட்சரியமூட்டும் வழிகளைத் திறந்து விடுகின்றான். இது மட்டுமல்ல. எந்த நாட்டில் கடினங்கள் ஏற்படுத்தப்படுகின்றதோ அங்குள்ள ஜமாஅத் மக்களுக்கு உறுதியான ஈமானை வழங்கிக் கொண்டே செல்கின்றான்.

எனது எல்லா விதமான பலவீனங்கள் இருந்தும் கூட அல்லாஹ் எவ்வாறு ஜமாஅத்தை வெற்றியின் பாதையில் முன்னேறச் செய்கின்றான் என்பதை நான் பார்க்கும் போது, அல்லாஹ்வின் மீதுள்ள ஈமானில் மேலும் முன்னேற்றம் ஏற்படுகின்றது. அல்லாஹ்வின் வாக்குறுதிகளின் மீது நம்பிக்கை இன்னும் வலுவடைகிறது. நிச்சயமாக இறைவனது கரங்கள் தான் ஜமாஅத்தை முன்னேற்றிக் கொண்டே செல்கிறது. மேலும் அல்லாஹ் யாரை கலீஃபாவாக நியமிப்பானோ அவரது நிலைமை எவ்வாறிருந்தாலும் அல்லாஹ் தனது உதவியை செய்து கொண்டே இருப்பான் இன்சா அல்லாஹ்.

ஐந்தாவது கிலாஃபத் நிலைபெற்றவுடன் அல்லாஹ் தனது இந்த செயல்ரீதியான சாட்சியத்தையும் வழங்கி விட்டான். அதாவது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய முன்னறிவிப்பு மற்றும் அன்னாருடைய உண்மைப் பேரன்பரின் கூற்று அதாவது கிலாஃபத் இஸ்லாத்தின் மறுமலர்ச்சியின் காலத்தில் நிலையானதாகும். நிச்சயமாக அல்லாஹ்வின் நியதியின்படி இந்த அமைப்பு அல்லாஹ்வின் அருளால் தொடரும் இன்சா அல்லாஹ்.

ஆனால் அல்லாஹ் கிலாஃபத்தின் அருளிலிருந்து பலன்பெறக் கூடியவர்களுக்கென்று சில அடையாளங்களைக் கூறியுள்ளான். நான் ஓதிய வசனத்தில் கிலாஃபத்திடமிருந்து பலன் பெறுவதற்கு தேவையான அந்த அனைத்து விசயங்களையும் கூறியிருக்கின்றான்.

அல்லாஹ் கூறுகின்றான்: நம்பிக்கை கொண்டவர்கள் அல்லாஹ்வின் பாலும், அவனது தூதரின் பாலும் அவர்களுக்கிடையில் தீர்ப்பு வழங்குவதற்காக அழைக்கப்பட்டால் அவர்களது பதில் ஸமிஃனா வஅதஃனா அதாவது நாங்கள் செவியேற்றோம்; கட்டுப்பட்டோம் என்பதாக இருக்கும். இவர்கள் தான் வெற்றிபெறச் கூடியவர்கள். இவர்கள் தான் வெற்றியினைக் காணக்கூடியவர்கள்.

ஆக, இங்கு ஆரம்பத்தில் இபாதத் மற்றும் மார்க்கத்தைப் பற்றி மட்டும் கூறப்படவில்லை. மாறாக திருக்குர்ஆனின் வாதமாகிய இதில் அல்லாஹ்வின் உரிமைகளைப் பற்றி விளக்கப்பட்டுள்ளதோ அங்கு அடியார்களுக்குரிய உரிமைகளைப் பற்றியும் விளக்கப்பட்டுள்ளது. சமூக அமைப்பு பற்றியும் விளக்கப்பட்டுள்ளது. நிர்வாக அமைப்பு பற்றியும் விளக்கப்பட்டுள்ளது.

திருக்குர்ஆன் ஒரு முழுமையான வாழ்க்கை நடைமுறைச் சட்டமாகும். ஜமாஅத்தில் பிரச்சனைகளைத் தீர்க்கக்கூடிய அமைப்பு மற்றும் அதற்கான ஏற்பாடு இருந்தும் இதில் தனது உலக விசயங்களில், சண்டைகளில் நீதிமன்றங்கள் செல்லும் மக்களுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. ஜமாஅத் அமைப்பில் சரீஅத், சட்டங்களை கண் முன் நிறுத்தி பிரச்சனை சரிசெய்யப்படும். ஆனால் அவர்கள் ஜமாஅத் அமைப்பின் முன்பு மறுக்கின்றார்கள். நாட்டின் நீதிமன்றங்களுக்கு அதனை எடுத்துச் செல்கின்றனர். குறிப்பாக குடும்பப் பிரச்சனைகள், வீட்டுப் பிரச்சனைகள், கணவன் மனைவி பிரச்சனைகள் போன்றவற்றை கொண்டு செல்கின்றனர். இதுபோன்ற வேறு சில பிரச்சனைகளும் உள்ளன. ஆரம்பத்தில் இவர்கள் ஜமாஅத்திற்கு பிரச்சனையைக் கொண்டு செல்லக் கூடாது என நினைக்கின்றார்கள். ஆனால் நீதிமன்றத்தில் அவர்களுக்கு எதிராக தீர்ப்பு வழங்கப்படும் போது அல்லது அவர்கள் எதிர்பார்த்தது அவர்களுக்கு கிடைக்காத போது, பிறகு ஜமாஅத்தின் பக்கம் வருகின்றனர். இந்த விசயங்கள் தான் ஒருவரது பலவீனமான ஈமானை வெளிப்படுத்துகின்றது.

அல்லாஹ் கூறுகின்றான்: இறைவன் மற்றும் அவனது தூதரின் தீர்ப்பிற்கேற்ப தமது விவகாரங்களை அமைத்துக் கொள்பவரே நம்பிக்கை கொண்டவராவார்.

ஜமாஅத் அமைப்பு இறைவன் மற்றும் அவனது தூதரின் தீர்ப்பிற்கேற்ப தீர்ப்பு வழங்க முயற்சி செய்கிறது. அவ்வாறு செய்யவும் வேண்டும்.

இங்கு ஜமாஅத் அமைப்பின் அந்தப் பிரிவைச் சேர்ந்த மக்களை எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். அதாவது யார் திருக்குர்ஆன் மற்றும் சுன்னத்திற்கேற்ப தீர்ப்பு வழங்கவில்லையோ அவர்களும் தவறிழைக்கின்றார்கள். மேலும் அவர்கள் தங்களது தவறின் காரணமாக ஜமாஅத் மற்றும் கிலாஃபத் அமைப்பிலிருந்து ஒரு சிலரை விலக்கவும் காரணமாகி விடுகின்றார்கள். அதற்கு அவர்களே பொறுப்பாளி ஆவார்கள். அல்லாஹ் மக்கள் மத்தியில் நீதியுடன் தீர்ப்பு வழங்குவதை கிலாஃபத்தின் ஒரு பணியாக வைத்துள்ளான்.

இன்றைய காலத்தில் அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்தில் வளர்ச்சிகள் ஏற்பட்டுக் கொண்டே செல்கின்றன. ஜமாஅத்துகளில் எந்த அளவு வளர்ச்சிகள் ஏற்பட்டுள்ளதென்றால் காலத்தின் கலீஃபா ஒவ்வொரு இடத்திற்கும் சென்று ஒவ்வொரு விவகாரத்தையும் நேரடியாக கையில் எடுத்துச் செய்வது என்பது சாத்தியமற்றதாகும். எந்த அளவு ஜமாஅத்தில் வளர்ச்சிகள் ஏற்படுமோ இதில் மேலும் அதிக கஷ்டம் ஏற்பட்டுக் கொண்டே செல்லும். எந்தப் பணியாளர் மற்றும் பொறுப்பாளர் இதற்காக நியமிக்கப்பட்டுள்ளார்களோ அவர்கள் இறையச்சத்தை மேற்கொண்டவாறு தக்வாவின் வழியில் சென்றவாறு தீர்ப்பு வழங்கவில்லை என்றால் தனது

பணியை நிறைவு செய்யவில்லை என்றால், அவர்கள் காலத்தின் கலீஃபாவிற்கு கெட்ட பெயர் வாங்கித் தருபவர்கள் ஆவர். இறைவன் முன் தானும் பாவமிழைத்தவராக ஆகின்றனர். காலத்தின் கலீஃபாவையும் தவறிழைக்க செய்பவராக்குகின்றனர்.

எனவே குறிப்பாக காஸி சாஹிபுகள், தீர்ப்பு வழங்கும் பொறுப்பு வழங்கப்பட்ட பொறுப்பாளர்கள் மற்றும் அமீர்மார்கள் நீதியில் நிலைநின்றவாறு கிலாஃபத்தின் உறுதிப்பாட்டிற்கு காரணமாக அமையவும் முயற்சி செய்ய வேண்டும். இல்லையென்றால் இவர்களே வெளிப்படையில் பொறுப்பாளர்கள் ஆவார்கள். மேலும் கிலாஃபத் அமைப்பின் வேரை உறுதியற்றதாக ஆக்க முயற்சி செய்பவர்கள் ஆவார்கள். எனவே கலப்பற்ற முறையில் அல்லாஹ்வுக்காக ஆகி, தக்வாவை மேற்கொண்டு வெற்றிபெறக் கூடியவர்களாக ஆகுகின்ற, ஜமாஅத் அமைப்பு, கிலாஃபத் அமைப்பிற்கு முழுமையாகக் கட்டுப்பட்டு, அல்லாஹ்விடம் மன்றாடக் கூடியவர்களாக ஆகுகின்றவர்களை அல்லாஹ் வெற்றிபெறக் கூடியவர்களாக ஆக்குகின்ற வேளையில் எவரிடமெல்லாம் தீர்ப்பு வழங்கக்கூடிய பொறுப்பு உள்ளதோ இதில் காஸி சாஹிபுகளும் அடங்குவார்கள். அவர்களுக்கும் நான் கூறுகின்றேன். நீங்களும் இறைவன் மற்றும் அவனது தூதருக்கேற்ப பணியாற்றுங்கள். நீதியிலிருந்து உங்களை விலக்கக்கூடிய விசயங்களைப் பேசாதீர்கள். தக்வாவிலிருந்து விலகியுள்ள விசயங்களைப் பேசாதீர்கள். காலத்தின் கலீஃபாவின் பிரதிநிதியாக செயல்படுவதற்குரிய சரியான உரிமையை செலுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இல்லையென்றால் ஒரு காலம் வரும். அப்போது கண்டிப்பாக பிடிபடுவீர்கள். உலக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இறைவனது தண்டனைக்கும் ஆளாக நேரிடும்.

ஆக இது ஒவ்வொரு பொறுப்பாளரும் அச்சப்பட வேண்டிய இடமாகும். பொறுப்பாளர் ஆவதென்பது வெறும் பெயருக்காக பொறுப்பாளர் ஆவது கிடையாது. மாறாக இது மிகப்பெரிய பொறுப்பாகும்.

**அடுத்து அல்லாஹ் கூறுகின்றான்:**

நீங்கள் இறைவன் மீது நம்பிக்கை வைத்துள்ளதாக வாதம் புரிகின்றீர்கள் என்றால் அவனது தூதர் மீது நம்பிக்கை வைத்துள்ளதாக வாதம் புரிகின்றீர்கள் என்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது நம்பிக்கை வைத்துள்ளதாக வாதம் புரிகின்றீர்கள் என்றால் உலகத்தை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் வழங்குவதாக வாதம் புரிகின்றீர்கள் என்றால் பிறகு அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் ஒவ்வொரு கட்டளையின் படியும் செயல்பட வேண்டும்.

காலத்தின் இமாம் உங்களிடம் கூறியதை செய்யுங்கள். காலத்தின் கலீஃபாவிடமிருந்து கொடுக்கப்படக்கூடிய ஒவ்வொரு வழிகாட்டலுக்கேற்ப செயல்படுங்கள். இல்லையென்றால் நீங்கள் உறுதிமொழி எடுப்பது சப்தமாக நாங்கள் அதனை செய்து விடுவோம். நாங்கள் இதனை செய்து விடுவோம் என வாதம் புரிவது அர்த்தமற்றதாகும். அல்லாஹ் உங்களது உள்ளங்களின் நிலைகளை நன்கறிகிறான். அவனுக்கு தெரியும். நீங்கள் சொல்வது என்ன? செய்வது என்ன? என்பதை அவன் அறிவான்.

ஒவ்வொரு இஜ்திமாவிலும் காலத்தின் கலீஃபா எடுக்கும் ஒவ்வொரு நல்ல முடிவுக்கும் கட்டுப்படுவோம். அதனை கடைபிடிப்பதை அவசியமானதாகக் கருதுவோம் என உறுதிமொழி எடுக்கத்தான் செய்கின்றார்கள். ஆனால் சின்னச் சின்ன விசயத்தைக் கூட பின்பற்றுவதில்லை. மாறாக திருக்குர்ஆனின் கட்டளைக்கு கட்டுப்படுவது மற்றும் பின்பற்றுவதற்குக் கூட முயற்சிகள் செய்வதில்லை. குறைந்தபட்ச தரத்தை அடைவதற்குக் கூட முயற்சிகள் செய்வதில்லை.

நான் ஓர் உதாரணத்தை கூறுகின்றேன். இங்கு வெஸ்ட் கேஸ்ட் உடைய ஜல்ஸா நடைபெற்றது. பல்வேறு விசயங்கள் இருக்கின்றன. மேலும் பல விசயங்கள் வெளியில் வரலாம். தற்போது பெண்களுடைய உதாரணம் என் முன் இருக்கிறது.

மேற்கத்திய நாடுகளில் வசிக்கக்கூடிய ஒவ்வொரு பெண்ணும் ஒழுக்கமான ஆடைகளை அணிய வேண்டும். ஹிஜாப் அணிய வேண்டும். நீங்கள் உங்களை மூடிக் கொள்ள வேண்டும். இது திருக்குர்ஆனின் கட்டளையாகும். இரு ஒரு சாதாரண கட்டளை ஒன்றும் கிடையாது. மாறாக திருக்குர்ஆன் குறிப்பாக இதனைக் கூறியுள்ளது. இதன்படி செயல்படுங்கள் எனவும் நான் கவனமூட்டியிருந்தேன்.

சிறிது நேரத்திற்குப் பிறகு நான் பார்த்தேன். இதன் பக்கம் கொஞ்சம் கூட கவனம் ஏற்படவில்லை. மாறாக சில பெண்களுக்கு லஜ்னாக்கள் கட்டாயப்படுத்தி நிகாப் போன்றவற்றை அணிவித்தார்கள். பிறகு லஜ்னா தரப்பிலிருந்து கொடுக்கப்பட்ட பர்தாக்களை அவர்கள் பள்ளிவாசலிலேயே போட்டு விட்டுச் சென்றுள்ளனர். சுத்தம் செய்யக் கூடியவர்கள் அதனை ஒன்றுசேர்த்தனர்.

ஆக இஸ்லாம் வெட்கத்தை பேண வேண்டும் என்ற கட்டளையை ஆண்களுக்கும் பெண்களுக்கும் கொடுத்துள்ளது. மேலும் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் குறிப்பாக பெண்களுக்கு தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் எனக் கூறியுள்ளார்கள். ஏனென்றால் ஆண்களின் பார்வை கட்டுப்பாடற்று இருக்கும் இந்தக் கட்டளை இருவரது நன்மைக்காகவும் கொடுக்கப்பட்டதாகும். இதில் எந்தவிதமான செலவும் எந்த விதமான உழைப்பும் கிடையாது. ஆனால் உலக சிந்தனை மிகைத்துள்ளது. அதனால் அவர்கள் இதன் பக்கம் கவனம் செலுத்துவதில்லை.

அல்லாஹ் நீங்கள் அமல் செய்தால் வெற்றி பெறக்கூடியவர்கள் ஆவீர்கள் என கூறுகின்றான். இல்லையென்றால் தூதரின் பணி தூதுச் செய்தியை எட்ட வைப்பது மட்டுமே ஆகும். இறைவனின் கட்டளைகளை தெளிவாக எடுத்துக் கூறுவது மட்டுமே ஆகும். நீங்கள் அமல் செய்தால் நேர்வழியினை பெறக்கூடியவர்களாகி விடுவீர்கள். மேலும் பைஅத்தின் உடன்படிக்கையை செலுத்தக்கூடியவர்களாகி விடுவீர்கள். இல்லையென்றால் அல்லாஹ் அனைத்தையும் அறிபவன் ஆவான் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

நாம் அஹ்மதி ஆகி விட்டோம் என்பதற்காக மட்டும் மகிழ்ச்சி அடையாதீர்கள். அல்லது அஹ்மதி வீட்டில் பிறந்துள்ளோம் என்பதற்காக மட்டும் மகிழ்ச்சியடையாதீர்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

என்னிடம் பைஅத்துடன் சேர்ந்து நல்ல அமல்கள் செய்யவில்லை என்றால் எந்தப் பயனும் தராது.

அடுத்து தொழுவது ஓர் அடிப்படை கட்டளையாகும். இதனை மனிதனின் பிறப்பின் நோக்கமாக இறைவன் கூறியிருக்கின்றான். ஆனால் இதிலும் நமது நல்ல திறம்பட செயல்படக்கூடிய பணியாளர்களும் கூட சோம்பேறித்தனம் காட்டி விடுகின்றனர். சில பொறுப்பாளர்கள் உள்ளனர். அவர்கள் வெளியில் பணிபுரிகின்றார்கள். நல்ல திறம்பட செயல்படக்கூடியவர்கள் ஆவார்கள். இங்கு வரும்போது மிகவும் உருக்கத்துடன் தொழுவார்கள். ஆனால் அவர்கள் வீட்டில் இருக்கும் போது தொழுவதில்லை என அவர்களது மனைவிமார்கள் கூறுகின்றனர்.

இறைவனது மிகவும் முக்கியமான கட்டளையின்படி செயல்படவில்லை என்றால் பிறகு நாங்கள் அதனை செய்து விடுவோம். இதனை செய்து விடுவோம் எனக் கூறுவது வீணானவையாகும். முதலில் தனது நிலைகளை சரிசெய்யுங்கள். இறைவனுடைய ஒவ்வொரு கட்டளையின்படி செயல்படக்கூடிய நிலைமை ஏற்படும் போது அல்லாஹ்வின் விருப்பத்தினை பெறுவதற்கு ஒரு சிறப்பான முயற்சி இருக்கும் போதுதான் ஓர் அஹ்மதி ஒரு மூஃமின் செவியேற்றோம்; கட்டுப்பட்டோம் என்பதன் உரிமையை செலுத்துபவராக ஆக முடியும். இவ்வாறு நடக்கும் போது ஈமான் கொண்ட பிறகு அதில் முன்னேற்றம் அடைவதற்கான முயற்சி இருக்கும் போது, நல்ல அமல்கள் செய்வதன் பக்கம் இருக்கும் போது அப்படிப்பட்ட மக்கள் கிலாஃபத்தின் அருளிலிருந்து பலன் பெற்றுக் கொண்டே செல்வார்கள்.

மேலும் ஈமான் கொள்ளக்கூடியவர்கள், நல்ல அமல்கள் செய்யக் கூடியவர்கள், இபாதத் செய்யக் கூடியவர்கள், எல்லா விதமான இணை வைப்பதிலிருந்தும் தவிர்ந்திருக்கக் கூடியவர்களுடன் தான் அல்லாஹ் இந்த வாக்குறுதியைச் செய்துள்ளான். அல்லது கிலாஃபத் அமைப்பிலிருந்து இவர்கள் தான் பலன் பெறுவார்கள். இவர்கள் தான் நிம்மதி பெறுவார்கள். இவர்களுக்கு தான் அச்சத்திலிருந்து அல்லாஹ் அமைதியை வழங்குவான். அவர்கள் கிலாஃபத் வடிவில் கிடைத்த அருளுக்கு நன்றி செலுத்தக் கூடியவர்களாக இருப்பார்கள்.

நான் கூறியது போன்று அஹ்மதிய்யத்தில் தான் அல்லாஹ் இந்த அமைப்பை ஏற்படுத்தியுள்ளான். இதனை தவிர வேறெங்கும் இந்த அமைப்பை தொடரச் செய்ய முடியாது. அஹ்மதிகள் அல்லாஹ்வின் அருளினால் நற்பேறு பெற்றவர்களாவார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டதன் விளைவாக அவர்களுக்கு கிலாஃபத்தின் அருளிலிருந்து பங்கு கிடைத்துக் கொண்டிருக்கிறது.

ஆக, எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் வாக்குறுதி நிபந்தனையற்றது கிடையாது. மாறாக சில நிபந்தனைகளை உள்ளடக்கியதாக உள்ளது. இந்த நிபந்தனைகளை நிறைவேற்றும் போது தான் அல்லாஹ்வின் அருளினால் நிம்மதியும் கிடைக்கும். அச்சத்தின் நிலை அமைதியில் மாறும். ஜமாஅத் மக்கள் இந்த விசயத்தை பலமுறை கண்டுள்ளனர். இந்தக் காலகட்டத்தில் மற்றவர்கள் கூட எவ்வாறு அல்லாஹ் அஹ்மதிகளுக்கு அமைதிக்கான ஏற்பாட்டை செய்கின்றான் என்பதை பார்த்துள்ளனர். இதனை நான் பலமுறை கூறியுள்ளேன். ஐந்தாவது கிலாஃபத் தேர்ந்தெடுப்பதற்கு முன்பு அஹ்மதிகளின் நிலை எவ்வாறு இருந்தது என்பதை மற்றவர்களும் உணர்ந்து கொண்டிருந்தனர். சிலர் ஜமாஅத்தின் மீது எப்படிப்பட்ட முடிவு வரப்போகிறது என எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். ஆனால் அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் வாக்குறுதி செய்ததற்கேற்ப அதனை மாபெரும் பொலிவுடன் நிறைவேற்றினான். அதனைக் கண்ட உலகம் பிரமித்துப் போனது. மேலும் M.T.A. மூலமாக மற்றவர்களும் இதனைக் கண்டனர். அச்சம் எவ்வாறு அமைதியில் மாறியது என்றால் நமது ஒரு அஹ்மதி அல்லாத பீர் சாஹிப் இவர் நமது ஓர் அஹ்மதிக்கு தெரிந்தவர் ஆவார். அவரிடம் இவர் நீங்கள் உண்மையாளர்கள் என்பதை நான் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டேன். ஆனால் இந்த அனைத்து விசயங்களையும் பார்த்த பிறகு இறைவனுடைய செயல் சாட்சி உங்களுடன் இருக்கிறது என நம்புகின்றேன் என்றார். இறைவனுடைய உதவி உங்களுக்கு கிடைத்துக்கொண்டு தான் இருக்கிறது. ஆனால் நான் உங்களது ஜமாஅத்தை ஏற்றுக் கொள்ளமாட்டேன் என்றார். ஆக இவ்வாறு மக்கள் அனைத்தையும் பார்த்த பிறகும்கூட தனது பிடிவாதம் மற்றும் அகம்பாவத்திலேயே நிலைநிற்கிறார்கள்.

பாகிஸ்தானில் இன்றைய நாட்களில் இழைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற கொடுமைகள் அஹ்மதிகள் முன்னேற்றம் அடைந்து கொண்டே செல்கிறார்கள் என்பதன் வெளிப்பாடாகும். இவர்களது களம் விரிந்து கொண்டே செல்கிறது. இவர்களை அழிப்பதற்கு முயற்சி செய்கிறார்கள். ஆனால் அழிக்க முடியவில்லை. இவர்களை எவ்வாறு அழிக்க முடியும்? என சிந்திக்கிறார்கள்.

நான் இந்த மக்களிடம் கூறுகின்றேன். அஹ்மதிய்யத்தின் எதிரிகளே! எங்களுடைய எஜமானன் எங்களுடைய நண்பன் அனைத்து ஆற்றல்களையும் கொண்ட இறைவன் ஆவான். நான் உங்களை ஒருபோதும் வெற்றி பெற விட மாட்டான். இஸ்லாத்தின் முன்னேற்றம் தற்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைச் சார்ந்துள்ளது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது கொடியை உலகில் இன்று மஸீஹ் மவ்வூது உடைய அடிமைகள் தான் பறக்க விடுவார்கள். நுபுவ்வத் வழியில் கிலாஃபத் மீது நம்பிக்கை கொண்டுள்ள மக்கள் தான் பறக்க விடுவார்கள். கிலாஃபத்துடன் இணைந்துள்ள ஜமாஅத்தின் சரடில் ஒன்றிணைந்துள்ள அல்லாஹ்வின் கயிற்றைப் பிடித்துள்ள மக்கள் தான் பறக்க விடுவார்கள்.

ஆக உங்களுடைய எந்தவித முயற்சியும் எந்தவித துன்புறுத்தலும் எந்தவித தாக்குதலும் எந்தவித அரசாங்கத்தின் உதவியும் அஹ்மதிய்யா கிலாஃபத்தினை அதன் நோக்கத்திலிருந்தும் தடுக்க முடியாது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முன்னேற்றத்தையும் தடுக்க முடியாது.

ஜமாஅத் மக்களும் நினைவில் கொள்ளுங்கள். நான் கூறியது போன்று இறையச்சத்தின்படி செயல்படுவது தொழுகைகளை நிலைநாட்டுவது மேலும் பொருள் தியாகத்தில் முன்னேறுவது ஆகியவை அவர்களை கிலாஃபத்தின் அருளிலிருந்து பங்குபெற்றுக் கொண்டே செல்லக் கூடியவர்களாக ஆக்கும். ஆக இது ஒவ்வொருவர் மீதும் கடமையாகும். இதற்காக ஒவ்வொருவரும் முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். இதன் மூலம் அல்லாஹ்வின் கருணையிலிருந்து பெரும் பங்குபெறக் கூடியவராக நாம் ஆக வேண்டும்.

நான் தற்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எழுதிய அல் வஸிய்யத் என்ற நூலிலிருந்து சில மேற்கோள்களை எடுத்துரைக்கின்றேன். இதனை அன்னார் கிலாஃபத் அமைப்பு தொடர வேண்டும் என விரும்பக் கூடிய மக்களைப் பற்றி, கிலாஃபத்திலிருந்து அருள்களைப் பெற விரும்புபவர்களைப் பற்றி, ஜமாஅத்துடன் இணைந்திருக்க விரும்புபவர்களைப் பற்றி, அல்லாஹ்வின் விருப்பத்தினைப் பெற விரும்புகின்றவர்களைப் பற்றி கூறுகின்றார்கள்.

நீங்களும் இரக்கத்தன்மை தமது ஆன்மாக்களை தூய்மை செய்தல் ஆகியவற்றின் மூலம் பரிசுத்த ஆவியின் பங்கினைப் பெற வேண்டும். ஏனெனில் பரிசுத்த ஆவியின்றி உண்மையான இறையச்சத்தைப் பெற முடியாது. மன இச்சைகளை முற்றிலும் விட்டு விட்டு இறை விருப்பத்தைப் பெறும் பொருட்டு எல்லா வழிகளையும் விட ஒடுங்கிய வழியினை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். உலக இன்பங்களைக் கண்டு ஏமாந்து விடாதீர்கள். அவை இறைவனிடமிருந்து விலக்கி விடுகின்றன. இறைவனுக்காக கசப்பான வாழ்வை மேற்கொள்ளுங்கள். இறை விருப்பத்தை பெற்றுத் தரக்கூடிய துன்பம் அவனை கோபமூட்டக்கூடிய இன்பத்தை விட சிறந்தது. இறை கோபத்திற்கு காரணமாக அமையும் வெற்றியை விட இறை திருப்தியைப் பெறக்கூடிய தோல்வியே சிறந்தது. இறைவனுடைய கோபத்தின் அருகில் கொண்டு செல்லும் அன்பை விட்டு விடுங்கள். நீங்கள் தூய உள்ளத்துடன் அவன் பக்கம் வருவீர்கள் என்றால் ஒவ்வொரு வழியிலும் அவன் உங்களுக்கு உதவி செய்வான். எந்த எதிரியாலும் உங்களுக்கு நஷ்டத்தை ஏற்படுத்த முடியாது.

நீங்கள் உங்கள் விருப்பத்தையும், உயிரையும் துறந்து மரணத்தின் காட்சியை உங்கள் முன்னால் கொண்டு வருகின்ற அந்தக் கசப்புகளைத் தாங்கிக் கொள்ளாமல் எந்நிலையிலும் நீங்கள் இறை திருப்தியைப் பெற முடியாது. ஆனால் நீங்கள் இந்தக் கசப்புகளைச் சகித்துக் கொண்டால் ஒரு அன்பான குழந்தையைப் போன்று இறைவனின் மடியில் அமர்ந்து கொள்வீர்கள். உங்களுக்கு முன்னர் சென்றுபோன நேர்மையான நல்லடியார்களின் வாரிசாக்கப்படுவீர்கள். மேலும் ஒவ்வோரு அருளின் கதவுகளும் உங்களுக்காகத் திறக்கப்படும். அந்தோ! அப்படிப்பட்டவர்கள் குறைவாகவே உள்ளனர்.

இறையச்சம் என்பது உள்ளத்தில் நடப்பட வேண்டிய ஒரு மரம் என இறைவன் என்னிடம் கூறினான். எந்தத் தண்ணீரால் இறையச்சம் வளர்ச்சி அடைகிறதோ அதுவே (வாழ்க்கை எனும்) தோட்டம் முழுவதையும் செழிப்பாக வைத்திருக்கும். இறையச்சம் எத்தகைய ஆணிவேர் என்றால் அது இல்லை எனில் எல்லாமே வீணானதாகும். அது எஞ்சியிருந்தால் எல்லாமே எஞ்சியிருக்கும். உண்மையில் உறுதியுடன் நிலைத்து நிற்காமல் இறைவனைப் பெறுவதற்காக நாவளவில் வாதிக்கும் மனிதன் வீண் செயலால் அவனுக்கு என்ன பலன் ஏற்படும்.

தனது உள்ளத்தில் மார்க்கத்துடன் சிறிது உலக நேசத்தையும் கலக்கின்ற மனிதன் அழிந்து விட்டான் என்பதை உண்மையாகவே உங்களுக்கு கூறுகின்றேன். மேலும் தனது எல்லா நோக்கமும் அல்லாஹ்வுக்காக அல்லாமல் சிலவற்றை இறைவனுக்காகவும் சிலவற்றை உலகிற்காகவும் வைத்திருக்கும் ஆன்மா நரகத்திற்கு மிக அருகில் உள்ளது. உங்களது நோக்கங்களில் உலக ஆசை அணு அளவு கலந்து விட்டாலும் கூட உங்களது எல்லா வணக்கங்களும் வீணாகி விடும்.

**மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நீங்கள் உண்மையிலேயே அவனுக்காக மரணித்து விட்டால் அந்நிலையில் நீங்கள் இறைவனிடம் வெளிப்படுவீர்கள். மேலும் இறைவன் உங்களுடன் இருப்பான். நீங்கள் வாழும் வீடு அருளுக்குரியதாக இருக்கும். உங்களது வீட்டுச் சுவர்களின் மீது இறைவனின் கருணை இறங்கும். அப்படிப்பட்ட மனிதன் வாழ்கின்ற நகரம் அருளுக்குரியதாக இருக்கும்.

உங்களது வாழ்வும், மரணமும் உங்களது ஒவ்வொரு அசைவும் உங்களது மென்மையும், கடுமையும் இறைவனுக்காக இருந்தால் மேலும் ஒவ்வொரு கசப்பான நேரத்திலும் துன்ப வேளையிலும் நீங்கள் இறைவனை சோதித்துப் பார்க்காமலும் அவனுடன் உள்ள உறவை துண்டித்துக் கொள்ளாமலும் உங்கள் பாதங்களை முன்னோக்கி வைத்தால் நீங்கள் இறைவனின் ஒரு சிறப்பான சமுதாயமாக ஆகிவிடுவீர்கள் என நான் உண்மையாகவே கூறுகின்றேன். நான் மனிதனாக இருப்பது போன்று நீங்களும் மனிதர்களாக இருக்கின்றீர்கள். என்னுடைய இறைவனே உங்களுடைய இறைவனாக இருக்கின்றான். எனவே உங்களுடைய தூய ஆற்றல்களை வீணாக்கி விடாதீர்கள். நீங்கள் முழுமையாக இறைவன் பக்கம் குனிந்தால் நீங்கள் இறைவனின் குறிப்பான அருளைப் பெற்ற சமுதாயமாக ஆகி விடுவீர்கள் என்பதை இறைவனின் நாட்டத்திற்கேற்ப நான் உங்களிடம் கூறுகின்றேன். இறைவனின் மகிமையை உங்கள் உள்ளங்களில் ஆழமாகப் பதிய வையுங்கள். அவனது ஏகத்துவத்தை நாவினால் மட்டுமல்லாமல் செயலினாலும் ஏற்றுக் கொள்ளுங்கள். அப்போது இறைவனும் செயலளவில் தனது அருளையும் கருணையையும் உங்கள் மீது பொழிவான். காழ்ப்புணர்ச்சி

கொள்வதிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். படைப்பினங்களுடன் உண்மையான அனுதாபத்துடன் நடந்து கொள்ளுங்கள். நன்மையின் எல்லா வழிகளையும் பின்பற்றுங்கள். எந்த வழியின் மூலம் நீங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவீர்கள் என்பது உங்களுக்கு தெரியாது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறை நெருக்கத்தைப் பெறுவதற்கான களம் காலியாகவே உள்ளது என்ற நற்செய்தியை உங்களுக்கு நான் தெரிவிக்கின்றேன். ஒவ்வொரு சமுதாயமும் உலகத்தை நேசித்துக் கொண்டிருக்கின்றது. இறைவன் திருப்தியடையும் விசயங்களின் பக்கம் உலகில் உள்ளவர்களுக்கு கவனம் இல்லை. எந்த மக்கள் முழுமையான வேகத்துடன் இந்த வாசலில் நுழைய விரும்புகின்றார்களோ அவர்கள் தங்கள் ஆற்றல்களை வெளிப்படுத்தி இறைவனிடமிருந்து சிறப்பான அருட்கொடையை பெற்றுக் கொள்வதற்குரிய சந்தர்ப்பம் இதுதான்.

இறைவன் உங்களை வீணாக்கி விடுவான் என நீங்கள் ஒருபோதும் கருத வேண்டாம். நீங்கள் உண்மையில் இறைவனின் கரத்தினால் மண்ணில் விதைக்கப்பட்ட விதையாவீர்கள். இந்த விதை முளைக்கும்; பூக்கும்; எல்லா திசைகளிலும் இதன் கிளைகள் படரும். பின்னர் வலுவானதொரு மரமாகி விடும் என்று இறைவன் கூறியுள்ளான். எனவே இறைவனின் வசனத்தில் நம்பிக்கை கொண்டு இடையில் ஏற்படும் சோதனைகளுக்கு அஞ்சாதவர்கள் அருளுக்குரியவர்கள் ஆவர். ஏனென்றால் சோதனைகள் வருவதும் அவசியமானதாகும். தமது பைஅத் வாதத்தில் உண்மையாளர் யார்? பொய்யர் யார்? என உங்களை சோதிக்கவே இறைவன் அவ்வாறு செய்கின்றான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

என் ஜமாஅத்திற்கு அறிவிக்கும்படி இறைவன் எனக்கு கூறியுள்ளதாவது, உலகப்பற்று கலவாத, வஞ்சகமோ, கோழைத்தனமோ கலவாத கட்டுப்பாட்டின் எத்தகுதியினையும் இழக்காத நம்பிக்கை கொண்டவர்கள் இறைவனின் விருப்பத்திற்குரியவர் ஆவர். மேலும் அவர்களே உண்மையான பாதையல் செல்பவராவார்கள்.

அல்லாஹ் அனைவருக்கும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது ஜமாஅத்திடம் வைத்த நம்பிக்கைக்கேற்ப முழுமையாக செயல்படுவதற்கு வாய்ப்பளிப்பானாக! அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் உண்மையான விசுவாசமான தொடர்பை ஏற்படுத்துவானாக! கட்டுப்படுதலின் உயர் தரத்தை நிலைநாட்டுவதற்கு வாய்ப்பளிப்பானாக! தனது இபாதத்துகளின் உயர் தரத்தை அடைவதற்கு வாய்ப்பளிப்பானாக! இதன் மூலம் நாம் கிலாஃபத்தின் அருள்களிலிருந்து பலன் பெற்றுக் கொண்டே செல்ல வேண்டும்.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HAZRATH KHALIFATUL MASIH V**
at BAIT-UN-NUR MOSQUE, Canada.
on **24.05.2013**

Translated by : Maulavi N. ZIAUL HAQ
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456